வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 19 of 2023

வழக்கு சாட்சி – PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.சரஸ்வதி | ஜாதி | : | |
| கணவர் பெயர் | : | சாமிநாதன் | தொழில் | : | மளிகை கடை |
| கிராமம் | : | அண்ணாநகர் ஆறுமுத்தாம்பாளையம் | சமயம் | : | |
| தாலுக்கா | : | பல்லடம் | வயது | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 25.05.2023.

(எதிரிகள் ஆஜர்).

முதல் விசாரணை: நாள்: 25.05.2023

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு ஆறுமுத்தம்பாளையம் அண்ணாநகரில் வருன்மளிகை என்ற பெயரில் மளிகை கடை வைத்து தொழில் செய்து வருகிறோம். கடைக்கு எனது அப்பாவும், எனது கணவரும் தினமும் காலையில் எழுந்து கடையை திறந்துவைப்பார்கள். நான் காலை 11.00 மணிக்கு மேல் கடைக்கு சென்று எனது கணவரையும், எனது அப்பாவையும் வீட்டிற்கு சாட்பிட அனுப்பிவைத்துவிட்டு, அவர்கள் வரும்வரை நான் கடையில் இருப்பேன். கடந்த 30.06.2022 ம் தேதி எனது மளிகை கடையில் நான் வியாபாரம் பார்த்து கொண்டிருந்தபோது மதியம் 1.00 மணியளவில் கடைக்கு ஒரு நபர் கடைக்கு வந்து ஜமானங்கள் வாங்கிகொண்டு தண்ணீர் கேட்டார்கள். நான் தண்ணீர் பாட்டில் எடுத்துகொடுக்க திரும்பியபோது நான் கழுத்தில் அணிந்திருந்த சுமார் 5 பவுன் தாலிக்கொடியை என் பின்புறமாக வந்து நான் அணிந்திருந்த தாலிக்கொடியை பறித்துக்கொண்டு ஓடினார். அவன் பின்னால் நான் துறத்திக்கொண்டு ஓடினேன். சுமார் 100 அடி தூரத்தில் மற்றொருவர் இரு சக்கர வாகனத்தை இயங்கிய நிலையில் நின்று இருந்தார். நான் துரத்திக்கொண்டு ஓடியபோது அவர் தயாராக இருந்த அந்த இருசக்கர வாகனத்தில் ஏறிச்சென்று பல்லடம் ரோட்டில் சென்று விட்டார்கள். நடந்த விபரத்தை

எனது கணவர் மற்றும் எனது அப்பாவிடம் தகவல் சொன்னேன். பின்னர் அவர்கள் வந்தவுடன் இரவு 8.00 மணிக்கு பல்லடம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் நான் கொடுத்த புகார் தான். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆகும்.

2. பிறகு 23.07.2022 ம் தேதி பல்லடம் காவல் நிலையத்திலிருந்து என்னிடம் பறித்து சென்ற நகை கிடைத்து இருப்பதாக தகவல் சொன்னார்கள். நான் பல்லடம் காவல் நிலையம் சென்று நகையினை அடையாளம் காட்டினேன். என்னிடம் நகையை பறித்த நபர் மற்றும் அந்த நபரை இரு சக்கர வாகனத்தில் அழைத்து சென்ற நபர் அங்கு இருந்தார்கள். ஆஜர் 1ம் எதிரி வெங்கடேஷ் தான் என்னிடமிருந்து நகையை பறித்தார். பிறகு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட எனது 5 பவுன் தாலிக்கொடியை மனு தாக்கல் செய்து இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்றேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகை என்னுடையது தான். அந்த புகைப்படம் **அ.சா.பொ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

எதிரிகள் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார்கள். ஆனார் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வரததால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடித்து வைக்கப்படுகிறது.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2023.05.25 20:44:16 +0530

நீதித்துறை நடுவர்
பல்லடம்

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 19 of 2023

வழக்கு சாட்சி – PW 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சாமிநாதன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | ஜெயபாண்டி | தொழில் | : | மளிகை கடை |
| கிராமம் | : | அண்ணாநகர் ஆறுமுத்தாம்பாளையம் | சமயம் | : | |
| தாலுக்கா | : | பல்லடம் | வயது | : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 25.05.2023.

(எதிரிகள் ஆஜர்).

முதல் விசாரணை: நாள்: 25.05.2023

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு ஆறுமுத்தம்பாளையம் அண்ணாநகரில் வருன்மளிகை என்ற பெயரில் மளிகை கடை வைத்து தொழில் செய்து வருகிறோம். கடைக்கு நானும், எனது மாமனாரும் காலை 11.00 மணிக்கு மேல் எனது மனைவி கடைக்கு வந்து எங்களை சாப்பிட அனுப்பிவைப்பார். நாங்கள் வரும் வரை அவர் கடையில் இருப்பார். கடந்த 30.06.2022 ம் தேதி எனது மளிகை கடையில் எனது மனைவி வியாபாரம் பார்த்து கொண்டிருந்தபோது மதியம் 1.00 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது எங்கள் கடைக்கு ஒரு நபர் கடைக்கு வந்து ஜமானங்கள் வாங்கிகொண்டு தண்ணீர் கேட்டார்கள். எனது மனைவி தண்ணீர் பாட்டில் எடுத்துகொடுக்க திரும்பியபோது எனது மனைவி கழுத்தில் அணிந்திருந்த சுமார் 5 பவுன் தாலிக்கொடியை அவருக்கு பின்புறமாக வந்து அவர் அணிந்திருந்த தாலிக்கொடியை பறித்துக்கொண்டு ஓடினார் என்றும், பின்பு அவரை என் மனைவி பின்னால் துறத்திக்கொண்டு ஓடினார் என்றம், சுமார் 100 அடி தூரத்தில் மற்றொருவர் இரு சக்கர வாகனத்தை இயங்கிய நிலையில்

நின்று இருந்தார் என்றம்,  எனது மனைவி துரத்திக்கொண்டு ஓடியபோது அவர் தயாராக இருந்த அந்த இருசக்கர வாகனத்தில் ஏறிச்சென்று பல்லடம் ரோட்டில் சென்று விட்டார்கள் என்று என்னிடம் தகவல் சொன்னார். பிறகு நான் வந்து விசாரித்துவிட்டு இரவு 8.00 மணிக்கு பல்லடம் காவல் நிலையம் சென்று எனது மனைவி புகார் கொடுத்தார். நான் உடன் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

எதிரிகள் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார்கள். ஆனார் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வரததால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடித்து வைக்கப்படுகிறது.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2023.05.25 20:44:23 +0530

நீதித்துறை நடுவர்
பல்லடம்